டிக்கெட் எடுக்கலாம்- ரெயில் வரும் நேரம் அறியலாம்

# மெட்ரோ ரெயில் பயணிகளுக்கு பயன்படும் செல்போன் 'செயலி'

## 10 வகையான வசதிகளை பெறலாம்

சென்னை, பிப். 16-

சென்னையில் 2 வழித்தடங்களில் 54 கி.மீட்டர் தொலைவுக்கு மெட்ரோ ரெயில் இயக்கப்படுகிறது. குறிப்பிட்ட இடத்தை விரைவாக அடைந்து விடலாம் என்பதால் மெட்ரோ ரெயில் பயணத்தை பெரும்பாலான பொதுமக்கள் விரும்புகிறார்கள்.

இந்தநிலையில் மெட்ரோ ரெயில் பயணிகளுக்கு பயன்படும் செல்போன் செயலி சேவையை சி.எம்.ஆர்.எல். நிறுவனம் தொடங்கி உள்ளது. இந்த மொபைல் செயலி மூலம் மெட்ரோ ரெயில் பயணத்தை மிக துல்லியமாக திட்டமிட்டு மேற்கொள்ள முடியும்.

### 10 வசதிகள்

இந்தசெயலியில்மெட்ரோ ரெயில் பயணம் தொடர்பாக 10 வகையான வசதிகள் அளிக்கப்படுகின்றன. இந்த செயலி மூலம் மெட்ரோ ரெயில் வழித்தடத்தை அறியலாம். மேலும் மெட்ரோ ரெயில் வரும் நேரம் அங்கிருந்து மற்றொரு இடத்துக்கு செல்ல இணைப்பு வாகன சேவை, பயண கட்டணம் உள்ளிட்ட தகவல்களை பயணிகள் இருந்த இடத்திலேயே செயலி மூலம் அறிந்து கொள்ளலாம்.

மேலும் பயணிகள் டிராவல் கார்டு, டிரிப் கார்டுகளில் எவ்வளவு தொகை இருப்பில் உள்ளது என்பதை அறிந்து வங்கிகளின் கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு வழியாக தொகையை செலுத்தி புதுப்பித்துக் கொள்ளலாம். இதன் காரணமாக ரெயில் நிலைய கவுண்டர்களில் பயணிகள் காத்திருப்பது தவிர்க்கப்படும்.

மேலும் இதில் 'கியூ ஆர்' டிக்கெட் வசதியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த செயலியில் உள்ள 'வாலட் கணக்கில் பணம் இருப்பு வைக்கலாம். இதன் மூலம் 'கியூ ஆர்' முறையில் டிக்கெட் வாங்கலாம்.

### 20 சதவீதம் சலுகை

தனி பயணம், குழு பயணத்துக்கு டோக்கன் வாங்குவதற்கு பதிலாக மொபைல் போனில் 'கியூ ஆர்' டிக்கெட்டை பயன்படுத்தலாம். இதில் எடுக்கப்படும் டிக்கெட்டுகளுக்கு 20 சதவீதம் தள்ளுபடி சலுகையும் வழங்கப்படுகிறது.

கொரோனா தொற்று காலத்தில் பணத்தை கையில் தொடாமல் ரெயில் நிலையத்தில் எந்த இடத்தையும் டோக்கனையும் தொடாமல் பயணிக்க இந்த செயலி வசதி பயனுள்ளதாக இருக்கும்.

### சுற்றுலா தலங்கள்

செயலி மூலம் மெட்ரோ ரெயில் நிலையங்களில் உள்ள வசதிகளை அறியலாம். அந்தந்த ரெயில் நிலையங்களை சுற்றி உள்ள சுற்றுலா தலங்கள் குறிப்பு விவரங்களை பெறலாம். அடுத்து வரும் ரெயில்களின் நேரத்தை துல்லியமாக அறியலாம். பயண கட்டணம், வாகனம் நிறுத்துமிடம் போன்ற விவரங்களை தெரிந்து கொள்ளலாம்.

உணவகம் மற்றும் விடுதி வசதி குறித்த விவரங்களை பெறலாம். சம்பந்தப்பட்ட ரெயில் நிலையங்களின் நுழைவுவாயில் ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம். சம்பந்தப்பட்ட மெட்ரோ ரெயில் நிலைய அதிகாரியை தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி எண்களையும் பெறலாம்.